செய்தி வெளியீடு எண்—578 நாள்17.7.2008

## <u>சட்டமன்ற உறுப்பினர் செல்வி கே.பாலபாரதி கோரிக்கையை ஏற்று திண்டுக்கல் அருகே நீரில் மூழ்கி இறந்த இருவர் குடும்பங்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் நிவாரண உதவி</u>

## <u>முதலமைச்சர் கலைஞர் ஆணை</u>

**திண்டுக்கல் மாவட்டம், சீலப்பாடி கிராமத்தைச் சேர்ந்த மாரியப்பன் மனைவி இராணி, பழனிச்சாமி மகள் சிறுமி துர்காதேவி இருவரும் குல்வார் குளத்தில் கடந்த 28.5.2008 அன்று துணி துவைத்த போது, சிறுமி துர்காதேவி நீரில் அடித்துச் செல்வதைப் பார்த்து அதிர்ச்சியுற்ற இராணி, துர்காதேவியைக் காப்பாற்ற முயன்றபோது, அவர்கள் இருவரும் நீரில் மூழ்கி இறந்ததாகவும், அவர்கள் இருவரது குடும்பங்களின் வறுமை நிலையைக் கருதி, நிவாரண உதவி வழங்க வேண்டுமென திண்டுக்கல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செல்வி கே.பாலபாரதி அவர்கள் அளித்த கோரிக்கையைப் பரிவுடன் ஏற்று, உயிரிழந்த சிறுமி துர்காதேவி மற்றும் இராணி குடும்பங்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் வீதம், மொத்தம் ஒரு இலட்ச ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிதியுதவி வழங்கிட முதலமைச்சர் கலைஞர் இன்று (17.7.2008) ஆணையிட்டுள்ளார்.**

*****

**வெளியீடு— இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9.**